**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 391/2022**
**Depostition of witness of Plaintiff – P.W.1(முருகன் )**
**20.06.2023**

**2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் 78 செண்ட் ஆகும். வழக்கு 30 செண்டிற்கு தாக்கல் செய்துள்ளேன். மொத்த விஸ்தீர்ணம் 78 செண்டும் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஜெயலட்சுமிக்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்து ஜெயலட்சுமிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் பார்த்திருப்பேன் ஞாபகம் இல்லை. கணக்கப்பிள்ளையிடம் என்ன எழுதி வாங்கினேன் என்று ஞாபகம் இல்லை. தாவா சொத்து ஜெயலட்சுமிக்கு பாத்தியப்பட்டது என்றும் அவரிடம் இருந்து நான் கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருவதாகதான் வழக்கில் சொல்லியுள்ளேன். தாவா சொத்துக்கள் ஜெயலட்சுமியின் கணவர் கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சொத்து கிரையம் வாங்கும்போதே அது கோவிந்தசாமிக்கு பாத்தியப்பட்டது என தெரிந்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை கிரையம் வாங்குவதற்கு முன்பு அவர்களுக்காக நான்தான் பராமரித்து வந்தேன். நான் 30, 40 வருடங்களாக பராமரித்து வந்தேன். அதனால் தாவா சொத்துக்கள் எவ்வாறு கோவிந்தசாமி குடும்பத்திற்கு பாத்தியம் என்பதும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பற்றியும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கோவிந்தசாமிக்கு இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் ஆவார். அவர்களில் செல்வி என்ற மகளுக்கு திருமணம் ஆகி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த செல்விக்கு ஹேமவர்த்தினி மற்றும் பாரத் என்ற இரண்டு பிள்ளைகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோவிந்தசாமியின் மற்றொரு மகள் மலர்விழி என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கும்போது எவ்வளவு விஸ்தீர்ணம் கிரையம் வாங்கினேன் என்றால் தாவா புலஎண்ணில் கண்ட 78 செண்ட் முழுவதையும் கிரையம் வாங்கினேன். கோவிந்தசாமி இறந்து 10, 20 வருடங்களுக்கு மேல் இருக்கும். அவர் உயிருடன் இருக்கும்போதே தாவா 78 செண்டில் நான் விவசாயம் செய்தேன். அவர் இறந்தபிறகும் விவசாயம் பார்த்தேன். அந்த 78 செண்ட் முழுவதற்கும் கோவிந்தசாமி பெயரில் தான் பட்டா என்றால் சரிதான். கிரையம் வாங்குவதற்கு முன்பு கோவிந்தசாமி பெயரில் உள்ள பட்டாவை பார்த்தேனா என்றால் ஞாபகம் இல்லை. கோவிந்தசாமிக்கு 1 ம் பிரதிவாதி மனைவி 2, 3 பிரதிவாதிகள் மகன்கள் என்றால் சரிதான். 2003 ம் வருடம் முதல் 2 ம் பிரதிவாதி கணேசன் மலேசியாவில்

இருந்து வருகிறார் என்றால் சரிதான். வருடம் தெரியவில்லை. நான் கிரையம் வாங்குவதற்கு எத்தனை வருடங்களுக்கு முன்பு இருந்து 2ம் பிரதிவாதி மலேசியாவில் இருந்து வருகிறார் என்றால் 4, 5 வருடங்களுக்கு முன்பிருந்து மலேசியாவில் இருந்து வருகிறார். 3 ம் பிரதிவாதி முருகன் உள்ளூரில் இருந்துகொண்டு அவ்வப்போது திருப்பூருக்கு வேலைக்கு செல்வார் என்றால் சரிதான். மலர்விழியை துவரங்குறிச்சிக்கு பக்கத்தில் திருமணம் செய்துகொடுத்துள்ளார்கள். எந்த வருடம் திருமணம் செய்துகொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கும்போது கோவிந்தசாமியின் வாரிசுகள் யாரிடமும் கிரையம் செய்துகொடுக்குமாறு கேட்டேனா என்றால் 2ம் பிரதிவாதி கணேசனிடம் போனில் கேட்டேன். அவர் கிரையம் வாங்கிக்கொள்ளுமாறு கூறினார். 2ம் பிரதிவாதி கணேசன் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை ஊருக்கு வருவார் என்றால் சரிதான். அவ்வாறு கணேசன் ஊருக்கு வரும் சமயத்தில் அவரிடம் சம்மத பத்திரம் எழுதி பதிந்து வாங்கினேனா என்றால் இல்லை. 3ம் பிரதிவாதி முருகனிடம் கிரைய பத்திரத்தில் கையெழுத்தோ அல்லது சம்மத பத்திரமோ எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நான் கேட்டேன் கிரையம் வாங்கிக்கொள்ளுமாறு கூறினார். மலர்விழியிடம் கேட்கவில்லை. ஊரில் இருந்திருந்தால் கேட்டிருப்பேன். கோவிந்தசாமியின் சொத்தில் அவரது பிள்ளைகளுக்கு உரிமை இருந்த காரணத்தால்தான் அவர்களிடமும் கேட்டேன். நான் அவர்களிடம் கேட்டேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 78 செண்ட் கிரையம் வாங்கிவிட்டு எதற்காக 30 செண்டிற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 30 செண்டிற்கு மட்டும் பிரசர் செய்தார்கள் அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். நான் 30 செண்டை பொறுத்து பிரசர் செய்தார்கள் என வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றும் மீதம் உள்ள சொத்தை பொறுத்து வில்லங்கம் செய்வதற்காக எனது அண்ணன் தம்பி பெயரில் இனாம்செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. கோவிந்தசாமியின் சொத்துக்களை அவரது வாரிசுகள் அனைவரிடமும் கிரையம் பெறாமல் அவரது மனைவியிடம் மட்டும் கிரையம் பெற்றுள்ளதால் என்னுடைய கிரையம் செல்லாது என்றால் சரியல்ல. கோவிந்தசாமியின் வாரிசு என்ற அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு 1/25 பாகம் மட்டுமே பாத்தியம் என்றும் அதை மட்டுமே அவரால் கிரையம் கொடுக்க முடியும் என்றால் சரியல்ல. கோவிந்தசாமியின் வாரிசுகள் அனைவரும் ஊரில் இருப்பதை தெரிந்துகொண்டும் 1ம் பிரதிவாதி பெண் என்பதால் பணத்தாசை காட்டி அவரை ஏமாற்றி கிரையம் பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பணத்தாசை காட்டியதால் 1ம் பிரதிவாதி அவர்களது வாரிசுகளுக்கு தெரியாமல் எனக்கு கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எதற்காக கிரையம் கொடுத்தார் என்றால் அவரது மகன் வெளிநாடு சென்ற செலவு மற்றும் மகளின் திருமண செலவிற்கான கடனை அடைப்பதற்காக கிரையம் கொடுத்தார். மகளின் திருமண செலவிற்கான

கடனை அடைப்பதற்கு கிரையம் கொடுத்தார் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன். 2ம் பிரதிவாதி 2003ம் வருடமே மலேசியாவிற்கு சென்று நல்லமுறையில் சம்பாதித்து வருகிறார் என்றும் அதனால் அவரை மலேசியாவிற்கு அனுப்பிய செலவிற்காக கிரையம் கொடுத்தார் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி மலேசியாவில் நல்லமுறையில் சம்பாதித்து அவர்தான் சகோதரிக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. வழக்குரையில் சொல்லாமல் தற்போது 1ம் பிரதிவாதி அவருடைய மகளின் திருமண செலவிற்கான கடனை அடைப்பதற்கு கிரையம் கொடுத்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் குடும்பத்தில் கூலி வேலை செய்து வந்த காரணத்தால் அனைத்து விவரங்களும் தெரிந்துகொண்டு 1ம் பிரதிவாதியின் பிள்ளைகள் ஊரில் இல்லாத சமயத்தில் கிரைய பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூலி வேலை செய்தது உண்மைதான். ஆனால் கிரையம் வாங்கும் அளவிற்கு விவரம் இல்லை. உரிமை இல்லாத நபர்களிடம்இருந்து கிரையம் வாங்கியுள்ளதால் அந்த சொத்துக்களில் எனக்கு எவ்வித உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி ஊருக்கு வந்தபோது நான் ஏற்படுத்திய கிரையம் தெரிந்துகொண்டு என்னை வேலைக்கு அழைப்பதில்லை என்றும் அதனால்தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திலோ வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்திலோ எனக்கு உரிமையோ அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. நாளது தேதிவரை தாவா சொத்துக்கள் 2,3 பிரதிவாதிகள் மற்றும் பெண் பிள்ளைகள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. உரிமையில்லாத நபர்களிடம் பெற்ற கிரைய பத்திரத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பட்டா செல்லாது என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து என்னுடையது என கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். உரிமை விளம்புகை கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(மறுவிசாரணை இல்லை)